Clr.No.19

# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
------

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUVOTTIYUR

| | | |
|---|---|---|
| Calendar | : | |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | Case No. CC.329/2022 |
| Sessions | : | |
| Deposition of witness for | : | Prosecution PW 4 |
| Name | : | அருள்தாஸ் |
| Father's/Husband's Name | .. | பால்ராஜ் |
| Village | | |
| Taluk | .. | |
| Caste | .. | |
| Calling | .. | |
| Religion | .. | |
| Age | .. | 55 |

Date : 09.01.2025

(Solemnly affirmed before this court under act X of 1969)

எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜர்.

முதல் விசாரணை:-

1. நான் மணலி பகுதியில் வசித்து வருகிறேன். காயலான் கடை வைத்து நடத்தி வருகிறேன். எதிரிகள் இருவரையும் நான் பார்த்ததில்லை. வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. தேதி மாதம் மற்றும் வருடம் எனக்கு ஞாபகம் இல்லை, காவல் நிலையத்தில் வைத்து என்னிடம் கையொப்பம் கேட்டார்கள் அதனால் கையொப்பம் இட்டேன். என்னிடம் காட்டப்படும் இரண்டு ஆவணங்களிலும் உள்ள முதல் கையொப்பம் என்னுடையதுதான். (ஒப்புதல் வாக்குமூலத்தில் & கைப்பற்றுதல் மகஜர்

உள்ள முதலாவது கையொப்பம் அ.சா.ஆ. 2 & அ.சா.ஆ. 3 ஆவணங்களாக குறியீடு செய்யப்படுகிறது). போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞரின் கோரிக்கையின் படி சாட்சி பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசு தரப்பு குறுக்கு விசாரணை:-

2. கடந்த 14.09.2022 அன்று மதியம் சுமார் 12.40 மணியளவில் மணலி சிபிசிஎல் கம்பெனி சந்திப்பு அருகே போலீசார் எதிரிகள் இருவரையும் கைது செய்தார்கள் என்றும் எதிரிகள் தானாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை என் முன்னிலையில் பதிவு செய்தார்கள் என்றும் எதிரிகளிடம் இருந்து வழக்கு சொத்தான இருசக்கர வாகனத்தை என் முன்னிலையில் கைப்பற்றினார்கள் என்றும் அதற்கு நான் சாட்சி கையப்பமிட்டேன் என்றால் சரியல்ல.